<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்</u>

முன்னிலை:- திருமதி.எஸ்.சுகன்யாஸ்ரீ,B.A.B.L (Hons), M.L., PGDAML
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

2024-ம் ஆண்டு மார்ச் மாதம் 12-ம் நாள் செவ்வாய்கிழமை

*<u>அசல் வழக்கு எண்: 126/2020ல் இ.ம.எண். 335/2023</u>*

சரவணன்
தனக்காகவும்
புவனகிரி தேவாங்க செட்டியார் சமூக
பெண்ணம் கொட்டாப்புளி பிரிவிற்காகவும்

…......... மனுதாரர்/வாதி

-எதிர்-

1. எஸ்.சிவக்குமார் (இறந்தார்)
எஸ்.ஆறுமுகம்
தனக்காகவும் புவனகிரி
தேவாங்க செட்டியார் சமூகதாரா
பிரிவிற்காகவும்

2. டி.கிருஷ்ணசாமி
3. டி.அன்பு
4. செல்வம்
2 முதல் 4 பிரதிவாதிகள்
தங்களுக்காகவும் புவனகிரி
தேவாங்க செட்டியார் சமூக பேரம் பிரிவிற்காகவும்

5. பி. பாலசுப்ரமணியன்
6. பி.ஜி.பாலசுப்ரமணியன்
7. எஸ். ஆறுமுகம்
5 முதல் 7 எதிர்வாதிகள்
தங்களுக்காகவும் புவனகிரி
தேவாங்க செட்டியார் சமூக போச்சா
பிரிவிற்காகவும்

8. பி. ராமலிங்கம்
தனக்காகவும் புவனகிரி தேவாங்க
செட்டியார் சமூக தொந்தா
பிரிவிற்காகவும்

9. என்.ராம்குமார்
தனக்காகவும் புவனகிரி தேவாங்க
செட்டியார் சமூக ஏரபூச்சி
பிரிவிற்காகவும்
10. என்.கிரூஷ்ணன்
தனக்காகவும் புவனகிரி தேவாங்க
செட்டியார் சமூக அந்திலி
பிரிவிற்காகவும்

11. சி.சுபாஷ்சந்திரன்
தனக்காகவும் புவனகிரி தேவாங்க
செட்டியார் சமூக கொசனம்
பிரிவிற்காகவும்

12. பழனிசாமி
தனக்காகவும் புவனகிரி தேவாங்க
செட்டியார் சமூக பெண்ணம் அப்பண்டோலு
பிரிவிற்காகவும்

…........எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த வழக்கானது 20.12.2023 அன்று என்முன்னர் முடிவான விசாரணைக்காக வந்தபோது மனுதாரருக்காக அறிவார்ந்த வழக்கறிஞர் திருமதி.என்.ஸ்ரீதேவி, அவர்கள் முன்னிலையாகியும், மனுதாரர் தரப்பு வழக்கறிஞரை கேட்டறிந்து வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்த நீதிமன்றம் பிறப்பிக்கும்...

<u>உத்தரவு</u>

1. இம்மனுவானது உரிமையியல் விசாரணை முறை சட்டம் 16 விதி 10(2)-ன் கீழ் “சாட்சி ராஜேந்திரன் என்பவர் புவனகிரி அருள்மிகு சாமுண்டீஸ்வரி ஆலய விழாக்கள் தொடர்பான 17.10.2018 தேதியில் இயற்றப்பட்ட தீர்மானம் அடங்கிய அசல் தீர்மான புத்தகத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வருகை தர வேண்டும் என்றும், அதற்குரிய நாள், நேரம், இடம் முதலியவற்றை குறிப்பிட்டு மேற்படி சாட்சியானவர் வழக்கமாக குடியிருந்து வரும் இல்லத்தின் வெளிக் கதவில் அனைவரும் பார்க்கக் சுடிய இடத்தில் சாட்சி சம்மனை ஒட்டி பிரகடனம் செய்ய Proclamation Issue செய்யும்படிக்கும் அதற்கும் வராவிட்டார் சாட்சி திரு. இராஜேந்திரன் என்பவரை பிடி ஆணைமூலம் (warrant) கைது செய்து அழைத்து வரும்படி” உத்தரவிடுமாறு மனு-தாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்:</u>

2) இம்மனுவில் மனுதாரர் அசல் வழக்கில் வாதி. எதிர்மனுதாரர்கள் பிரதிவாதிகள் என்றும் இந்த எதிர்வாதிகள் பேரில் மனுதாரர் புவனகிரி தேவாங்கர் சமூகம் நிர்வாகத்திற்குட்பட்ட அருள்மிகு சாமுண்டீஸ்வரி ஆலய உற்சவ நிகழ்ச்சிகளில் 17.10.2018 தேதியில் ஏற்பட்ட தீர்மானத்தின்படி பெண்ணம் கொட்டாபுளி வகையறரா ஆகிய இரு பிரிவுகளுக்கும் ஆண்டுக்கு ஒரு பிரிவினருக்கு சுழற்சி முறையில் முதல் மரியாதை செய்ய 1 முதல் 12 எதிர்வாதிகளுக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பிறப்பிக்கும்படிக்கும் மேற்படி புவனகிரி அருள்மிகு சாமுண்டீஸ்வரி ஆலய உற்சவ

நிகழ்ச்சிகளில் 17.10.2018 தேதயில் ஏற்பட்ட தீர்மானத்திற்கு எதிராக யாதொரு செயலும் எதிர்வாதிகள் செய்யக்கூடாது என எதிர்வாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பிக்கும்படிக்கும் மேலும் சில தீர்வுகளுக்கும் இவ்வழக்கு தொடுக்கப்பட்டு இவ்வழக்கில் எதிர்வாதிகள் வழக்கினை மறுத்தும் பொய் உரைத்தும் எதிர்வழக்குரையில் எதிர்கட்சி செய்து வருவதாகவும் இதற்கிடையில் இந்த வழக்கில் மேற்படி 17.10.2018 தீர்மானப்புத்தகம் அசல் மேற்படி ஆலய கணக்குப் பிள்ளை கோவிந்தன் மகன் இராஜேந்திரன் என்பவரிடம் உள்ளதால் இவ்வழக்கில் மேற்படி தீர்மனத்தை குறியீடு செய்ய வேண்டி மேற்படி அசல் ஆவணத்தை கொண்டு வரும்படி (தாக்கல் செய்யும்படி) சாட்சி படி கட்டியதாகவும் அவர் அன்று நீதிமன்றத்தில் முன்னிலை ஆகவில்லை என்றும் சாட்சி படி கட்டியதாகவும் அவர் மேற்படி சாட்சி சம்மனை பெற்று கொண்டு விட்டதாகவும் சென்ற 20.6.2023 அன்று நீதிமன்றத்தில் முன்னிலை ஆகவில்லை என்றும் மேற்படி அசல் ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றும் மேற்படி சாட்சி இராஜேந்திரன் என்பவர் எதிர்வாதிகளின் பேச்சை கேட்டு அசல் ஆவணத்தை முன்னிடவில்லை என்றும் மேற்படி சாட்சி தக்க காரணமின்றி வருகைதர தவறி விட்டதாகவும் மேற்படி அசல் ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றும் அவருடைய செய்கை சட்ட விரோதமானது என்றும் நீதிமன்ற ஆணைக்கு கீழ்ப்பணியவில்லை என்றும் எனவே “சாட்சி இராஜேந்திரன் என்பவர் மேற்படி அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வருகை தர வேண்டும் என்று அதற்குரிய நாள், நேரம், இடம் முதலியவற்றை குறிப்பிட:டு மேற்படி சாட்சியானவர் வழக்கமாக குடியிருந்து வரும் இல்லத்தின் வெளிக் கதவில் அனை-வரும் பார்க்கக் கூடிய இடத்தில் சாட்சி சம்மனை ஒட்டி பிரகடனம் செய்ய Procla-mation Issue செய்யும்படிக்கும் அதற்கும் வராவிட்டால் சாட்சி திரு. இராஜேந்திரன் என்பவரை பிடி ஆணைமூலம் (warrant) கைது செய்து அழைத்து வரும்படி” உத்தரவிடுமாறு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இந்த மனு ஆணை 16 விதி 10(2)-கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதால் எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பு நீதியின் நலன் கருதி கொடுக்கப்படவில்லை.

4. மனுதாரர் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணம் இல்லை. நீதிமன்ற சார்பில் நீ.மா.சா.1 விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

5. <u>இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் மனு-</u>

<u>தாரர் தாக்கல் செய்துள்ள இந்த இடைமனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதே தயாகும்.</u>

6. வழக்கு கோப்பு பரிசிலிக்கப்பட்டது. மனுதாரர் வாதம் கேட்கப்பட்டது. மனுதாரர் இந்த எதிர்வாதிகள் பேரில் செயலுறுத்துக்கட்டளை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் இந்த வழக்கில் மேற்படி 17.10.2018 தீர்மானப்புத்தகம் அசல் மேற்படி ஆலய கணக்குப் பிள்ளை கோவிந்தன் மகன் இராஜேந்திரன் என்பவரிடம் உள்ளதால் இவ்வழக்கில் மேற்படி தீர்மனத்தை குறியீடு செய்ய வேண்டி மேற்படி அசல் ஆவணத்தை கொண்டு வரும்படி (தாக்கல் செய்யும்படி) சாட்சி படி கட்டியதாகவும் அவர் அன்று நீதிமன்றத்தில் முன்னிலை ஆகவில்லை என்றும் சாட்சி படி கட்டியதாகவும் அவர் மேற்படி சாட்சி சம்மனை பெற்று கொண்டு விட்டதாகவும் சென்ற 20.6.2023 அன்று நீதிமன்றத்தில் முன்னிலை ஆகவில்லை என்றும் மேற்படி அசல் ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றும் மேற்படி சாட்சி இராஜேந்திரன் என்பவர் எதிர்வாதிகளின் பேச்சை கேட்டு அசல் ஆவணத்தை முன்னிடவில்லை என்றும் எனவே இராஜேந்திரன் என்பவர் மேற்படி அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வருகை தர வேண்டும் என்று அதற்குரிய நாள், நேரம், இடம் முதலியவற்றை குறிப்பிட்டு மேற்படி சாட்சியானவர் வழக்கமாக குடியிருந்து வரும் இல்லத்தின் வெளிக் கதவில் அனைவரும் பார்க்கக் கூடிய இடத்தில் சாட்சி சம்மனை ஒட்டி பிரகடனம் செய்ய Proclamation Issue செய்யும்படிக்கும் அதற்கும் வராவிட்டால் சாட்சி திரு. இராஜேந்திரன் என்பவரை பிடி ஆணைமூலம் கைது செய்து அழைத்து வரும்படி உத்தரவிடுமாறு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. அசல் வழக்கை பரிசீலனை செய்கையில் 17.10.2018 தீர்மானப்புத்தகத்தை ஆலய கணக்குப்பிள்ளையான இராஜேந்திரன் நீதிமன்றத்தில் சமர்பிக்க சாட்சி அழைப்பானை 24.4.2023 செலுத்தப்பட்டது. இந்நீதிமன்றமும் அதனை அனுமதித்து, சாட்சிக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்டது. வாதியை பொறுத்தவரையில் அந்த ஆவணம் ஒரு முக்கிய தன்மை வாய்ந்தது. கோப்பினை பரிசீலனை செய்ததில், சாட்சியானவர் 11.06.2023 அன்று நீதிமன்றம் அழைப்பாணையை பெற்றுள்ளார். அந்த அழைப்பாணையை சார்வு செய்த இளநிலை கட்டளை நிறைவேற்றுநர் நீ.ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் சாட்சியத்தில் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். ........" O.S.126/2020 என்ற வழக்கில் வாதி தரப்பில் சாட்சி சம்மன் ராஜேந்திரன் என்பவருக்கு அனுப்புமாறு நீதிமன்றத்தில் இருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. 09.06.2023 அன்று அந்த சாட்சி சம்மன் ஆனது மத்திய

நாசர்-ஆல் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்னிட்டு நான் 11.06.2023 அன்று மாலை 5 மணியளவில் தேவாங்கன் திருமண மண்டபத்தின் அலுவலகத்தில் ராஜேந்திரன் இருந்தார். ராஜேந்திரனிடம் நீதிமன்றத்தில் இருந்து சம்மனில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை பற்றி கூறி படிபணமான ரூ100/-ஐ ராஜேந்திரனிடம் கொடுத்து சம்மனில் கண்ட ஆவணங்களை பற்றி கூறி படிபணமான ரூ.100/- ஐ ராஜேந்திரனிடம் கொடுத்து சம்மனில் கண்ட ஆவணங்களை சம்மனில் குறிப்பிட்டுள்ள தேதியில் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு சொன்னேன். ராஜேந்திரனிடம் என்னிடம் இருந்து அலுவலக சம்மனில் கையெழுத்து பெற்றுக்கொண்டு 15.06.2023 அன்று மத்திய நாசரிடம் சம்மனை ஒப்படைத்து விட்டேன்.”...........

8. எனவே நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் மேற்படி இராஜேந்திரன் இந்நீதின்றத்தில் ஆஜராக கடமைப்பட்டவர் ஆவார். ஆனால் இந்த நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின் விவரத்தை தெரிந்து கொண்டு இராஜேந்திரன் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. நீ.மா.சா.1 சாட்சியத்தில் இருந்து இராஜேந்திரன் சாட்சிய அழைப்பாணையை பெற்றுக்கொண்டுள்ளார் என இந்நீதிமன்றம் திருப்தியுறுகிறது.

மனுதாரர் தரப்பில் இராஜேந்திரனுக்கு எதிராக வாரண்ட் பிறப்பிக்க கோரியிருந்தாலும் வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டு தற்போதைக்கு சாட்சி இராஜேந்திரனுக்கு எதிராக உ.ந.மு.ச.கட்டளை 16 விதி 10(2)ன் படி பிரகடன நடவடிக்கை போதுமானது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே சாட்சி இராஜேந்திரன் இந்நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்ற இந்நீதிமன்றத்தின் பிரகடனத்தை உ.ந.மு.ச. கட்டளை 16 விதி 10 (2) ல் கூறப்பட்டுள்ள வழிமுறை-களை பின்பற்றி செயல்படுத்த உத்தரவிடப்படுகிறது. சாட்சி இராஜேந்திரன் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றால் சாட்சியை கைது செய்ய மனுதாரர் தரப்பில் தனி நடவடிக்கை எடுத்து கொள்ள மனுதாரருக்கு உரிமையை அளித்து இந்நீதிமன்றம் உத்திரவிடுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு பின்னர் இன்று 12.3.2024ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-.S.Suganiya Sri)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

இருதரப்பிலும் சாட்சிய மற்றும் சான்றாவணம் தாக்கல் இல்லை.

<u>நீதிமன்ற சாட்சி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சி:</u>

நீ.ம.சா.1- கமால் பாட்ஷா (Junipr Bailiff)

<u>நீதிமன்ற சாட்சி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சி:</u> இல்லை

(Sd/-.S.Suganiya Sri)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.